**தேசிய கைப்பணிகள் மன்றம் - 2013**

---

தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்ற இணைக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

நடைமுறையல்லா சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் தன்மை தொடர்பாக கருத்தில் கொள்ளாது ரூபா 718,228 பெறுமதியான நூலகப் புத்தகங்களுக்கான பொறுமானத்தேய்வுக் கொள்கை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்தின் ஒட்டுமொத்த நடைமுறையல்லா சொத்துக்கள் அரசாங்கத்தின் மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படடிருந்த போதிலும் உரிய பெறுமானத்தேய்வை முறையாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் மானியங்களின் பெறுமதி ரூபா 88,290,000 ஆக இருந்த போதிலும் அதன் அடிப்படையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 60,884,509 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கைப்பணியாளர்களின் நலன்புரிக்காக ஏற்படுத்தப்பட்ட கைப்பணி நலன்புரி நிதியத்தின் மூலம் கைப்பணிக் கைத்தொழில் கைப்பணியாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் கைப்பணியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விற்பனைச் சேவையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந்த நிதியத்தின் நிதி விளைவுகளில் காணப்படுகின்ற படி வேறான கணக்குகள் வைக்கப்பட்டிராததுடன் ரூபா 3,491,102 கூட்டுத்தொகையான கொழும்பு கோட்டை மற்றும் மொலகொடை போன்ற விற்பனைக் கூடங்களின் இறுதியிருப்பு மற்றும் லக்சல நிறுவனத்திற்கு கையேற்கப்பட்ட ரூபா 5,660,058 கிரயமான பொருட்களுக்காக கிடைக்க வேண்டிய தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபையின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள

பயிற்சி நிலையங்களுக்கு உரித்தாக இருந்த ரூபா 46 மில்லியன் தொகையான சொத்துக்கள், தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பெறுமதி உரியவாறும் தனித்தனியாகவும் காண்பிக்கப்படாமையின் காரணமாக அச் சொத்துக்கள் மன்றத்தின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

03 சொத்துக் கணக்குகளுக்குரிய கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 467,097 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(இ) | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 876,052 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 651,637 தொகை 05 வருடங்களை விட பழைய மீதியையும் உள்ளடக்கியிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 396(இ) | இரண்டு வங்கிக் கணக்குகளில் முறையே ரூபா 147,056 கூட்டுத்தொகையான 31 காசோலைகளும் ரூபா 29,793 கூட்டுத் தொகையான 30 காசோலைகளும் 06 மாத காலங்களுக்கு மேற்பட்டிருந்ததுடன் அந்தக் காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 565 | 03 வருடங்களை விஞ்சிய ரூபா 1,453,270 கூட்டுத்தொகையான வைப்புக்களும் 1995 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான ரூபா 125,490 தொகையான பாதுகாப்பு வைப்பும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 29,421,880 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, கணனி உபபாகம் மற்றும் மென் பொருளுக்காக பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 30,791,896 தேறிய பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 50,961,490 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 20,169,594 இனால் வீழ்ச்சியில் குறைவொன்றைக் காணமுடிந்ததுடன் மன்றத்தின் மொத்த வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 72 சதவீதத்தினால் உயர்வடைந்தமை இந்த வீழ்ச்சி குறைவடைந்தமைக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம்

2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் சில பிரிவுகளின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட அந்த சில பிரிவுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) பௌதீக செயல்முன்னேற்றம்

| செயற்பாடுகள் | எதிர்பார்த்த இலக்குகள் | நிறைவேற்றப்பட்ட அளவு | அடைந்து கொள்வதற்கு தவறிய சதவீதம் |
|---|---|---|---|
| பாரம்பரியக் கைத்தொழில் விற்பனைக் கிராமம் | 02 | - | 100 |
| பாரம்பரியக் கைத்தொழில் நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | 25 | 18 | 28 |
| மூலப்பொருள் பயிர்ச் செய்கைக்கான கன்றுகள் | 106,950 | 10,000 | 91 |
| பயிலுனர்களுக்கு உபகரணத் தொகுதிகள் | 500 | 138 | 72 |
| அடிப்படைத் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 40 | 32 | 20 |
| மத்திய தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 10 | 08 | 20 |
| பாரம்பரியக் கைத்தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | - | 100 |
| பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்துதலின் எண்ணிக்கை | 15 | 10 | 33 |

எட்டு பிரிவுகளில் பௌதீக செயலாற்றல் எதிர்பார்த்த இலக்குகளில் நிறைவேற்றப்பட்ட அளவு 100 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது.

**(ஆ) நிதி செயல்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியினை விஞ்சி 126 சதவீதம் முதல் 172 சதவீதம் வரையிலான அளவில் செலவிடப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது கைப்பணியாளர்களைப் பதிவு செய்தல், அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட உள்நாட்டு விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையில் குறைவைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் பயிற்சி நிலையங்களில் உற்பத்தி வசதிகளைப் பெற்ற கைப்பணியாளர்களின் குறைவு காணப்பட்ட காரணத்தால் பயிற்சி நிலையங்களில் 20 சதவீதம் வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைப்பணிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் மேற்பார்வை நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) சீகிரிய கைப்பணி கிராமத்தில் வாடகைக்கு வழங்கப்பட்ட கூடாரங்களில் 2013 திசெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் இருந்த கைப்பணியாளர்களிடமிருந்து மாத்திரம் அறவிடுவதற்கிருந்த நிலுவை வாடகைக் கட்டணம் 123,000 ஆக இருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1990 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 13/1/225/10/8/551 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையில் 99 வருட குத்தகை வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காணி இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபையின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற ''அபேகம'' உருவாக்கப்பட்டிருந்ததுடன் இந்தக் காணியின் உரிமை தொடர்பாக சர்ச்சைக்குரிய தன்மையிலான நிலைமை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கைப்பணிகள் மன்றத்தால் ''அபே கம'' இல் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கைப்பணி கண்காட்சி மூலம் வெற்றிபெற்ற விசேட கலை வடிவமைப்பாளர்களுடைய கைப்பணி அருங்காட்சியகமொன்றை ''அபேகம'' இல் அமைத்திருந்ததுடன் அதன் பராமரிப்பிற்காக மீளாய்வாண்டில் ரூபா 60,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை பாரம்பரியக் கைத்தொழில் சபையிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட 03 ஏக்கர்களையுடைய ''சிகிரிய கைப்பணிக்கிராமம்'' தற்போது 04 மாடிகளையும் 40 விற்னைக் கூடாரங்களையும் உள்ளடக்கியிருந்த போதிலும் ஒரு கட்டிடமும் 09 விற்பனைக் கூடாரங்களும் மாத்திரமே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. லக்சல இற்காக வழங்கப்பட்ட கட்டிடம், விரிவுரை மண்டபம், சிற்றுண்டிச்சாலை, மலசலகூடத்தொகுதி என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பயன்படுத்துவதற்கு நீர் இல்லாமை, சுற்றுலா பிரயாணிகள் வருகை தராமையால் கைப்பணியாளர்களின் வருமானம் குறைந்தமை கிராமத்தை நடாத்திச் செல்வதிலுள்ள வசதியீனங்களுக்காக முக்கிய தாக்கமளித்திருந்தது.

(ஆ) பஹல ஹபுவித லாக்ஷா மரங்களில் வடிவங்களைச் செய்யும் பயிற்சி நிலையத்திலுள்ள ஆயுதங்களும், உபகரணங்களும் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துவதற்குத் தவறியமையின் காரணமாக தாமதக் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 6,649 தொகை மிகைக் கட்டணமாக விதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,431,316 தொகை செலவில் தேசிய கைப்பணிகள் மன்ற காட்சியகத்தை முறைமைப்படுத்துதல் மற்றும் உள்ளக அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காகவும் கைப்பணிகள் மன்ற வளவில் கைப்பணிக் கிராமத்திற்கு உட்செல்வதற்காகவும் ரூபா 1,152,902 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரப்பாலத்தை திறப்பதற்குமுன் வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக உடைத்து அகற்றப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 504 இன் பிரகாரம் இச் சொத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பதவியணியினர் நிருவாகம்

தேசிய கைப்பணிகள் மன்றத்தில் 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மத்திய நிலையில் இரண்டு வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 29 வெற்றிடங்களும் காணப்பட்டமையால் சபையின் வேலை நடவடிக்கைகளை செயற்திறனாகச் செய்வதில் பிரச்சினைகள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் ஒரு உத்தியோகத்தர் மேலதிகமாக இருந்தார்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஆ) முற்பணக் கட்டுப்பாடு

(இ) உரிய சட்ட ஏற்பாடுகளைக் கடைப்பிடித்தல்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) கைப்பணிப் பயிற்சி நிலையத்தைப் பேணிச் செல்லல்